<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1 P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | செல்லமுத்து | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.01.2026.

**<u>எதிரி நீதிமன்றத்திற்கு காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் உடுமலைப்பேட்டை தாந்தோணியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நானும் எனது கணவர மற்றும் மகனுடன் வசித்து வருகிறோம். எனது மகன் விக்டஸ் கம்பெனியில் வேலை செய்து வருகிறார் கடந்த 18.10.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு வீட்டை பூட்டி விட்டு எங்களது எல்லைமேடு தோட்டத்திற்கு நானும் எனது கணவரும் சென்றிருந்தோம். திரும்பி வந்து 5.45 மணிக்கு வந்து பார்த்த போது கதவு திறந்து சாத்திய நிலையில் இருந்தது. முன் பக்க கதவு நெம்பி நிலவு உடைந்து கிடந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்த போது தென்புறமுள்ள பெட்ரூம் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த துணிகள் சிதறி கிடந்தது.
2. பின்னர் மேல் புறமுள்ள உள்ள பெட்ரூமில் சாமான்கள் சிதறி கிடந்தது. பெட்டின் மெத்தைக்கு அடியில் நாங்கள் வைத்திருந்த ரூபாய் பத்தாயிரம் பணத்தை காட்டும்போது திருடு போயிருந்தது. உடனே அக்கம் பக்கம் விசாரித்து என் மகனுக்கு தகவல்

சொன்னோம். என் அண்ணன் முத்துசாமி வந்தவுடன் அவரது அறிவுரையின் படி 23.10.2025 ம் தேதி புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். புகார் நான் சொல்ல என் மகன் எழுதினார். **புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் போலிசார் புகாரை பெற்று என்னை உடனடியாக விசாரித்தார்கள். பணம் இது நாள் வரையில் கிடைக்கவில்லை. திருடிய நபர் எங்களது பணத்தை வைத்து நண்பர்களுடன் ஊர் சுற்றி செலவு செய்து விட்டதாக தகவல் சொன்னார். திருடிய நபர் அபிராஜ் என்று கூறினார். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எழுத படிக்க தெரியாது என்றால் ஆமாம். புகாரில் என்ன உள்ளது என்று படித்து பார்த்து தெரிந்து கொண்டிர்களா என்றால் என் மகன் எழுதினார் நான் சொன்னேன். கைரேகை செய்தேன். 10000/— காணாமல் போனதாக சொல்லியுள்ள நிலையில் டிமானினேசன் பற்றியும் மேற்படி பணத்தை என்ன வகையில் ஈட்டினிர்கள் என்ற விவரம் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.
2. புகார் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் காவல்நிலையம் வைத்து புகார் கொடுத்தோம். போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் 18 ம் தேதி பணம் காணாமல் போனது 23 ம் தேத மற்றும் 2 முறை காவல்நிலையத்தில் வைத்து உமா மகேஸ்வரி விசாரித்ததார்கள். பணம் காணாமல போனதாக சொல்லியுள்ளநிலையில் பணம் வைத்திருந்த ரூம் பூட்டவில்லை என்றால் ஆமாம்.
3. வீடு கதவு உடைத்து திருடு போனதாக சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு உண்மையாக நிகழ்ந்திருந்தால் புகார் உடனே கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் 5 நாட்கள் காலதாமதம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. யாரால் புகார் எழுதப்பட்டது என்று வழக்கில் எவ்விடத்தில் குறிப்பிடப்படாத சூழ்நிலையில் புகார் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.2 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | செல்லமுத்து | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.01.2026.

**எதிரி நீதிமன்றத்திற்கு காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்**

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டை தாந்தோணியில் வசித்து வருகிறேன். விக்டஸ் கம்பெனியில் செய்து வருகிறேன். அசா.1 எனது அம்மா ஆவார். நானும் எனது அப்பா அம்மாவுடன் தாந்தோணியில் வசித்து வருகிறோம். கடந்த 18.10.2024 ம் தேதி நான் எனது கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த போது மாலை 5.45 மணிக்கு மேல் என் அம்மா மல்லிகா போன் செய்தார். போன் செய்து வீடு உடைக்கப்பட்டுள்ளதாகவும் வீட்டில் உள்ள பொருட்கள் சிதறி கிடப்பதாகவும் வீட்டில் பெட்டிற்கு அடியில் வைத்திருந்த பணம் ரூ. 10000/- ஐ திருடு போய் விட்டதாக தகவல் சொன்னார். நான் உடனே வீட்டிற்கு சென்று பார்த்த போது வீட்டின் கதவின் நிலவு நெம்பி உடைக்கப்பட்டிருந்ததை பார்த்தேன்.
2. பின்னர் வீட்டில் உள்ள பொருட்கள் சிதறி கிடந்தது. அக்கம் பக்கம் விசாரித்தோம். பின்னர் எனது மாமா முத்துசாமி வெளியூரில் இருந்ததால் அவர் வந்தவுடன் அவருக்கு தகவல் சொன்னோம். அவர்அறிவுரையின் படி 23.10.2025 ம் தேதி காவல் நிலையம்

சென்று புகார் கொடுத்தோம். புகார் நான் எழுதினேன். எனது அம்மா சொல்ல நான் எழுதினேன். புகாரில் எனது அம்மா கைரேகை வைத்தார். பணம் எடுத்தது எதிரி அபிராஜ் என்று தெரிந்து கொண்டேன். திருடிய நபர் எங்களது பணத்தை வைத்து நண்பர்களுடன் டுர் சென்று செலவு செய்து விட்டதாக தகவல் சொன்னார். திருடிய நபர் அபிராஜ் என்று கூறினார். போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்ன படித்துள்ளிர்கள் என்றால MCA படித்துள்ளேன். பணம் யார் எடுத்ததாக சொல்லியுள்ளநிலையில் போலிசார் சொன்னது பின்னிட்டு தான் தெரியும் என்றால் ஆமாம். இவ்வழக்கில் கூறப்பட்டுள்ளவாறு வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தால் அன்றைய தினமே புகார் கொடுக்கப்பட்டிருக்கும என்றாலும் 5 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டிருக்காது என்றாலும் சரியல்ல. போலிசார் சொன்னதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 597/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 3 P.W.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லமுத்து | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ரங்கசாமி | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 12.01.2026.

**<u>எதிரி நீதிமன்றத்திற்கு காவலில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் உடுமலைப்பேட்டை தாந்தோணியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். நானும் எனது மனைவி மற்றும் மகனுடன் வசித்து வருகிறோம். எனது மகன் வாளவாடி பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். கடந்த 18.10.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு வீட்டை பூட்டி விட்டு எங்களது எல்லைமேடு தோட்டத்திற்கு நானும் எனது மனைவியும் சென்றிருந்தோம். திரும்பி வந்து என் மனைவி 5.45 மணிக்கு வந்து பார்த்த போது கதவு திறந்து சாத்திய நிலையில் இருந்தது. நான் ¼ மணி நேரம் கழித்து வந்து பார்த்தேன். பார்த்த போது முன் பக்க கதவு நெம்பி நிலவு உடைந்து கிடந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்த போது தென்புறமுள்ள பெட்ரூம் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த துணிகள் சிதறி கிடந்தது. பின்னர் மேல் புறமுள்ள உள்ள பெட்ரூமில் சாமான்கள் சிதறி கிடந்தது. பெட்டின் மெத்தைக்கு அடியில் நாங்கள் வைத்திருந்த ரூபாய் பத்தாயிரம் பணம் திருடு போயிருந்தது. உடனே அக்கம் பக்கம் விசாரித்து என் மகனுக்கு தகவல் சொன்னோம். உடனடியாக காவல் நிலையம் சென்று புகார்

கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.